தினமலர்
உண்மையின் உரைகல்

## பழம்பெரும் நெல் ஆடுதுறை 39

பதிவு செய்த நாள் : ஜூன் 06,2012,00:00 IST



ஆடுதுறை ஆராய்ச்சி நிலையம் கண்டுபிடித்த ஆடுதுறை 39 ரகம் தமிழகத்தில் வலம் வந்துகொண்டு இருக்கிறது.

**மதுரை பகுதியில் ஆடுதுறை 39:** ஆடுதுறை 39 ரகத்தை விவசாயிகள் கல்சர் நெல் என்று சொல்வார்கள். மதுரை பகுதியில் ஆடுதுறை 39 ரகம் இரண்டாவது பயிராக சாகுபடி செய்தபோது ஆடுதுறை 43 மற்றும் 45 ரகத்தைவிட அதிக மகசூலினைக் கொடுக்கின்றது. இந்த ரகம் ஐ.ஆர்.8 மற்றும் ஐ.ஆர்.20 ரகங்களை கருவொட்டு செய்து உருவாக்கப்பட்டது. மழை, பனி, குளிர் பட்டங்களில் பூஞ்சாள நோய்களால் பாதிக்கப் படுவதில்லை.

**தஞ்சை தாளடியில் ஆடுதுறை 39**: தஞ்சை மற்றும் நாகை மாவட்டங்களில் தாளடி பட்டத்தில் ஆடுதுறை 39 ரகம் மிக சிறப்பாக சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. மேலும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்ட நிலையிலும் நல்ல மகசூலினைக் கொடுக்கின்றது. மணல்பாங்கான நிலத்திற்கும் ஏற்றதாக உள்ளது. வயதான நாற்றினை நடவேண்டிய நிர்ப்பந்தத்திலும் மகசூல் பாதிக்கப்படுவதில்லை. ஆடுதுறை 39 ரகத்தில் எலிவெட்டு பாதிப்பு மிகவும் குறைவு. மற்றும் அறுவடை சமயம் பயிர் கீழே சாய்வதில்லை.

**புழுதிக்கால் சாகுபடியில் ஆடுதுறை 39:** தமிழகத்தில் மிக அதிக பரப்பளவில் புழுதிக்கால் சாகுபடி

செய்யும் மாவட்டம் காஞ்சிபுரம். வடகிழக்குப் பருவமழை உதவியினால் இந்த சாகுபடி பல வருடங்களாக தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றது. ஆவணியில் நிலத்தை உழுது நன்கு மக்கிய எருக்களை இட்டபிறகு நீரில் ஊறப்போடாத விதைகள் ஏர்சாலிலோ, கொருகலப்பை உபயோகித்தோ விதைக்கப்படும். முளைத்த பயிர் சுமார் இரண்டு மாதங்கள் மானாவாரி பயிர்போல் வளர்ந்து வரும். பின் ஐப்பசி மழையில் ஏரிகள் நிரம்பிய உடன் பாசனப் பயிராக மாறிவிடும். இந்தமுறை சாகுபடிக்கு ஆடுதுறை 39 ரகம் சிறப்பாக உள்ளது. விதை விதைத்த 135ம் நாளில் அறுவடைக்கு வரும். 1.5 ஏக்கரில் 45 மூடை மகசூல் இந்த ரகம் கொடுத்துள்ளது. வைக்கோல் விற்பனையிலும் வருவாய் உண்டு. பல விவசாயிகளால் இன்றும் பாராட்டப் படுவது ஆடுதுறை 39 ரகமாகும்.

**கிருஷ்ணகிரி பகுதியில் ஆடுதுறை 39:** கிருஷ்ணகிரி பகுதியில் தோட்டக்கால் பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. இங்கு அதிக அளவில் சாகுபடிக்கு உதவுவது கிணற்றுப் பாசனம்தான். இங்கு விவசாயம் எருது மாடுகள் வைத்து செய்யப்படுகின்றது. மேலும் கறவை மாடுகளும் உள்ளன. இவைகளுக்கு வைக்கோல் தேவைப்படுகின்றது. தோட்டக்கால் நிலையில் மா சாகுபடி செய்தாலும் நெல் சாகுபடியும் சிறப்பாக செய்யப்படுகின்றது. நெல் சாகுபடியில் வியாபார பிரச்னையே கிடையாது. பல விவசாயிகள் இரண்டாம் பயிராக ஆடுதுறை 39 ரகத்தை மழை, பனி, குளிர் இருக்கும் பட்டத்தில் சாகுபடி செய்கிறார்கள். இங்கு விவசாயி விருபாக்ஷன் நெல் சாகுபடி தொடர்ந்து செய்துவருகிறார். மழை வந்தாலும் பயிர் பொதுவாக பாதிப்படைவது இல்லை. பூச்சி, பூஞ்சாள நோய் இல்லை. இங்கு விவசாயிகளுக்கு பாசன நீர் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தில்இருந்தும் கிடைக்கின்றது. சமீபத்தில் இவர் அறுவடை செய்த ஆடுதுறை 39 ரகம் மழையால் பாதிப்பில்லாமல் வந்தது. இருப்பினும் நெல் மகசூல் பாதிக்கப்பட்டு இதனால் நஷ்டம் வருமோ என்று பயந்தபோது அறுவடைக்குப் பின் விவசாயிக்கு ஏமாற்றம் மறைந்து சந்தோஷம் ஏற்பட்டது.

## நெல் வயலில் ஒருங்கிணைந்த எலி மேலாண்மையின் வெற்றிக்கதை

பதிவு செய்த நாள் : ஜூன் 06,2012,00:00 IST



மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வலச்சிக்குளம் கிராமத்தில் விவசாயிகளிடையே ஒருங்கிணைந்த எலி வேளாண்மை முகாம் நடைபெற்றது. நெல் நடவு வயலின் 15 சத குத்துகள் அல்லது 2 சத சிம்புகள் சேதமடைந்திருந்தாலும் கதிர் உருவாகும் முன் கீழ்க்காணும் எலிக்கட்டுப்ப்பட்டு முறைகளை கடைபிடிக்க வேண்டும்.

* வயலில் வரப்புகள் குறுகியதாக அமைத்துக்கொள்ளுதல் அவசியம்.
* எலிகள் மறைந்து தங்கி வாழ்வதற்கு உகந்ததாக இருக்கும் வைக்கோல்.
* போர்களையும் முள் செடிகளையும் அப்புறப்படுத்த வேண்டும்.
* கதிர் வெளிவரும் தருணத்தில் தஞ்சாவூர் வில் எலிக்கிட்டிகளை ஏக்கருக்கு 20 என்ற அளவில் வரப்பிலிருந்து 3மீ விட்டு கிட்டிக்கு கிட்டி 5 மீ இடைவெளியில் வைத்தல் வேண்டும்.
* எலிகளின் சேதம் அதிக அளவில் காணப்படும் போது ஜிங்க் பாஸ்பைடு அல்லது புரோமோடையலான் நச்சு மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும்.
* எலிகளின் இயற்கை விரோதிகளான பாம்பு, கீரி மற்றும் பறவை இனங்கள் போன்றவற்றைக் காக்க வேண்டும்.
* வயல்களிலும் வரப்புகளிலும் ஆங்கில டி வடிவ குச்சிகளை நட்டு வைப்பதால் ஆந்தை போன்ற பறவைகள் இரவு நேரங்களில் அமர்ந்து எலிகளைக்கொல்ல வகைசெய்யலாம்.
* கோடை மாதங்களில் வயல்களில் உணவுப் பொருட்களே இல்லாத சூழ்நிலையில் எலிகள் நச்சுணவை எளிதில் எடுத்துக்கொள்கிற பக்குவத்தில் நச்சுணவு எலிகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம்.

மேற்கூறிய கட்டுப் பாட்டு முறைகளைத் தனித் தனியாக மேற்கொள்ளாமல் ஒருங்கிணைந்த வகையில் ஒரு கிராமத்திலுள்ள அனைத்து விவசாயிகளும் ஒன்றுபட்டு சமுதாய நோக்குடன் கடைபிடித்தால் எலிகளை கணிசமாகக் கட்டுப்படுத்தலாம். எலி ஒழிப்பு முகாமில் நச்சுணவு வைத்து எலிகளை கட்டுப்படுத்தும் முறைகளை செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்படுகிறது. எலிக்கொல்லி நச்சுக்களை நேரடியாகப் பயன்படுத்தி எலிகளைக் கொல்ல இயலாது. எனவே இவற்றை உணவில் கலந்து எலிகளுக்குக் கொடுக்க வேண்டும். எலிகள் விரும்பி உண்ணும்

பொரி, தானிய வகைகள் அல்லது கருவாடு(97 கிராம்), தேங்காய் எண்ணெய் (1 மில்லி) ஆகியவற்றுடன் ஜிங்க் பாஸ்பைடு (2 கிராம்) கலந்து உபயோகிக்க வேண்டும். இந்த நச்சுத்தீனியை வைப்பதற்கு முன் 2 அல்லது 3 நாட்களுக்கு நச்சு கலக்கப்படாத உணவை வைக்க வேண்டும். இவற்றை ஒரு ஏக்கருக்கு 10 இடங்களில் வைக்க வேண்டும். ஒரு இடத்தில் 15-20 கிராம் (3-4 தேக்கரண்டி) என்ற அளவில் வைக்க வேண்டும். எஞ்சியுள்ள எலிகளைக் கட்டுப்படுத்த புரோமோடையலான் தயார்நிலை மருந்தை பயன்படுத்தலாம். இம்முகாமில் வலச்சிக்குளம் கிராமத்திலுள்ள விவசாயிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். **தகவல்:** ஆர்.நளினி, முதன்மை ஆராய்ச்சியாளர், 99422 66709, விவசாயக்கல்லூரி, மதுரை.-கே.சத்தியபிரபா, உடுமலை.

## சின்னச்சின்ன செய்திகள்

பதிவு செய்த நாள் : ஜூன் 06,2012,00:00 IST



ஊட்டச்சத்து மிக்க சிறுதானிய உணவு வகைகள்: கேழ்வரகு: தானியத்தில் 7.8 முதல் 13 சதம் புரதச்சத்து உள்ளது. கால்சியம் சத்து 100 கிராமில் 344 மில்லிகிராம் உள்ளது. வைட்டமின் "ஏ' காரணியான பீ கரோட்டின் 42 மில்லிகிராம் அளவிலும் உள்ளது. ரத்தசோகை நோயைக் கட்டுப்படுத்த தேவையான அளவு இரும்புச்சத்துக்கள் (0.4 மில்லிகிராம்) உள்ளது. இதிலுள்ள அதிக அளவிலான நார்ச்சத்துக்கள் ரத்தத்திலுள்ள கொலஸ்டிரால் என்னும் கொழுப்புப் பொருள் உற்பத்தியைத் தடுக்கிறது. உடலில் உள்ள சர்க்கரையின் அளவும் குறைகிறது. இதனால் உடலில் தோன்றும் புற்றுநோய், சர்க்கரை நோய்களைக் குணப் படுத்துகிறது. பெரும்பாலும் தாய்மார்கள் தாய்ப்பால் குறையும் காலங்களில் சர்க்கரை கலந்து குழந்தைகளுக்கு ஊட்டி ஈடுசெய்வார்கள்.

**சோளம்:** மக்காச் சோளத்தில் உடலுக்குத் தேவையான அனைத்து வைட்டமின்கள், நார்ச் சத்துக்கள், கார்போஹைட் ரேட், கொழுப்பு உள்ளிட்ட ஏராளமான சத்துக்கள் உள்ளன. அதிக

அளவில் பி வைட்டமின் கார்போஹைட்ரேட்டுடன் வினைபுரிந்து பரிணாம வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கிறது. போலேட் என்னும் இரும்புச்சத்து உடலில் புதிய செல்களை உற்பத்தி செய்வதில் பெரும்பங்கு வகிக்கிறது. வைட்டமின் சி சத்து நோய் எதிர்ப்பு சக்தியைக் கொடுக்கிறது. சர்க்கரை நோயாளிகளின் ரத்த அழுத்தத்தை சீராக்குகிறது. சோளத்தில் அதிக அளவில் காணப்படும் போலிக் ஆசிட் கர்ப்பக்குழாயில் உள்ள அடைப்பை நீக்கி, மலட்டுத்தன்மையை போக்குகிறது.

**கம்பு:** தர அடிப்படையில் நாட்டுக்கம்பு அல்லது பொட்டுக்கம்பு என்று ஒன்றும், அரிசிக்கம்பு அல்லது வீரிய ஒட்டுக்கம்பு என்று மற்றொன்றும் உள்ளது. வறட்சி தாண்டவமாடும் காலங்களில் மக்களின் பசியைப் போக்கும் பொருளாக கம்பு இருந்துவந்துள்ளது. நம் முன்னோர்கள் தங்கள் உணவில் சிறிதளவு தானிய வகைகளை சேர்த்து வந்தனர். இரவு நேரங்களில் ஒரே இடத்திலிருந்து வேலை செய்பவர்கள், அதிக வெப்பம் உமிழும் பகுதிகளில் வேலை செய்பவர்கள், அதிக மன அழுத்தம் கொண்டவர்கள் போன்றவர்களின் உடல் அதிக உஷ்ணம் அடையும். இவர்கள் கம்பை கஞ்சியாகக் காய்ச்சி காலை வேளையில் அருந்திவந்தால் உடல் சூடு குறையும்.

**உழவன் உணவகம்:** களி, கம்பஞ்சோறு, சோளப்பணியாரம், வல்லாரை சுடுச்சாறு, ராகி தோசை ஆகியவை பரம்பரை பரம்பரையாக தமிழ் மண்ணில் மணக்கும் இயற்கை உணவுகள். இன்றும் பிளாட்பார கடைகளில்தான் இருக்கின்றன. மதுரை மாவட்ட ஆட்சியராக இருந்த சகாயம் நாமக்கல் பாணியில் தொடங்கச் செய்திருக்கிறார்.
மதுரை நத்தம் சாலையில் உள்ள நாராயணபுரம் பகுதியிலுள்ள ராமகிருஷ்ண மடத்தில் செயல்பட்டுவரும் இந்த உணவகத்தில் தினை, கம்பு, சாமை, வரகு போன்ற சிறுதானியங்களில் செய்யப்படும் பாரம்பரிய மிக்க உணவுகள் மற்றும் மூலிகை உணவுகள் விற்பனை செய்யப்படுகின்றன. அத்திப்பழ அல்வா, முள்முருங்கை தோசை, செம்பருத்தி இட்லி, குதிரைவாலி பொங்கல், தினைமாவு பணியாரம் என நீளும் உணவு வகைகளை மக்கள் ஆர்வத்துடன் சுவைத்து வருகிறார்கள். உழவன் உணவகத்தில் கடை வைத்துள்ள பழையூர் சீனிவாசன், "இதனால் எங்கள் வருமானம் அதிகரிச்சிருக்கு. தினமும் 8 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் கிடைக்குது. குறைந்த விலையில் உடம்புக்கு ஆரோக்கியமான உணவுகள் நாங்க கொடுக்கிறதால நாளுக்கு நாள் வாடிக்கையாளர்கள் அதிகமாயிட்டே இருக்காங்க. வெளிநாட்டு பயணிகளும் ஆர்வமாக வந்து சாப்பிட்டுப்பார்த்து பாராட்டுகிறார்கள்.'
உழவன் உணவகத்தை நிர்வகித்துவரும் மதுரை வேளாண் விற்பனைத்துறை அலுவலர் ஆறுமுகம் "உள்ளூர் மக்களுக்கு மட்டுமல்லாமல் உலகளவில் தனக்கான சந்தையை ஏற்படுத்தி வருகிறது இந்த உழவன் உணவகம். இந்த உழவன் உணவகத்திலிருந்து இலங்கை, ஆஸ்திரேலியா, ஓமன்

போன்ற நாடுகளுக்கு ஆர்டரின்பேரில் உணவு வகைகளை ஏற்றுமதி செய்து வருகிறார்கள்'.

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

## நடப்பு 2011- 12ம் பருவத்தில் பருத்தி உற்பத்தி 3.47 கோடி பொதிகளாக உயரும்

ஜூன் 06,2012,00:25



புதுடில்லி:நடப்பு 2011-12ம் சந்தைப்படுத்தும் பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்), நாட்டின் பருத்தி உற்பத்தி, 3.47 கோடி பொதிகளாக இருக்கும் என, பருத்தி ஆலோசனை வாரியம் (சி.ஏ.பீ.,) மறு மதிப்பீடு செய்துள்ளது. இது, முதல் மதிப்பீட்டில், 3.45 கோடி பொதிகளாக (1 பொதி-170 கிலோ) இருக்கும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.பயன்பாடு:அதேசமயம், உள்நாட்டில், பருத்தி பயன்பாடு, நடப்பு பருவத்தில், 2.50 கோடி பொதிகளாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது, கடந்த பருவத்தில், 2.60 கோடி பொதிகள் என்றளவில் இருந்தது. மத்திய வேளாண் அமைச்சகம், நடப்பு 2011-12ம் வேளாண் பருவத்தில் (ஜூலை-ஜூன்), நாட்டின் பருத்தி உற்பத்தி, 3.52 கோடி பொதிகளாக இருக்கும் என மதிப்பீடு செய்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.நடப்பு பருவத்தில், சென்ற மே 27ம் தேதி வரையிலுமாக, பருத்தி சாகுபடி செய்யும் முக்கிய பகுதிகளிலிருந்து, சந்தைகளுக்கு, 3.22 கோடி பொதிகள் வந்துள்ளன. நாள் ஒன்றுக்கு சராசரியாக, 65 ஆயிரம் பொதிகள் என்றளவில் இதன் வரத்து உள்ளதாக, இந்திய பருத்தி கழகம் (சி.சி.ஐ.,) தெரிவித்துள்ளது.

நடப்பு சந்தையில், பல்வேறு தரம் கொண்ட, ஒரு கேண்டி (356 கிலோ) பருத்தியின் விலை, ஏப்ரல் 14ம் தேதி நிலவரப்படி, 34 ஆயிரத்து 700 முதல் 45 ஆயிரம் ரூபாய் வரை இருந்தது. அதேசமயம், கடந்த ஆண்டின் இதே காலத்தில், இதன் விலை, 50 ஆயிரத்து 500 முதல், 83 ஆயிரம் ரூபாய் வரை இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்றுமதி:நடப்பு பருவத்தில், பருத்தி உற்பத்தி அதிகரிக்கும் என்ற மதிப்பீட்டால், மத்திய அரசு, 1.15 கோடி பருத்தி பொதிகளை ஏற்றுமதி செய்ய ஒப்புதல் வழங்கியிருந்தது. இந்நிலையில்,

விவசாயிகளின் நலன் கருதி, கூடுதல் பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்க வேண்டும் என, மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவார் வேண்டுகோள் விடுத்திருந்தார்.
இதையடுத்து, பொது உரிமை அடிப்படையில், பருத்தி ஏற்றுமதி மீதான தடை விலக்கி கொள்ளப்பட்டது. கடந்த 2010-11ம் பருவத்தில், 78 லட்சம் பொதிகள் ஏற்றுமதி செய்யப்பட்டது. உலகளவில், பருத்தி உற்பத்தி மற்றும் அளிப்பில், இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.உற்பத்தி அதிகரிக்கும் என்ற மதிப்பீட்டால், ஏற்றுமதிக்கான தடை விலக்கி கொள்ளப்பட்டுள்ளது என்பது இந்திய ஜவுளி துறையை பாதிக்கும் என, உள்நாட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
ஏனெனில், கடந்த ஆண்டு, விலையுடன் ஒப்பிடும் போது, நடப்பாண்டில், இதன் விலை மிகவும் சரிவடைந்து உள்ளது. இதனால், பருத்தி, சாகுபடி செய்து வந்த, பல விவசாயிகள் மாற்று பயிர் சாகுபடிக்கு மாறி விடும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, வரும் 2012-13ம் பருவத்தில், இதன் உற்பத்தி குறைவதுடன், பருத்தி கையிருப்பும் குறைந்து விடும்.
எனவே, மத்திய அரசு, பருத்தி ஏற்றுமதி குறித்து, மறு ஆய்வு செய்வதுடன், கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள உள்நாட்டு ஜவுளி துறையை, பாதுகாக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என, இந்திய ஜவுளி துறை கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

சர்வதேச சந்தையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால், இந்திய ஜவுளி துறை பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இதை கருத்தில் கொண்டு, அண்மையில், மத்திய அரசு, ஜவுளி ஆலைகளின், 35 ஆயிரம் கோடி ரூபாய் கடனை, மறுசீரமைப்பு செய்வதற்கு, ஒப்புதல் வழங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.
மூலப்பொருட்கள் :ஏற்கனவே, இந்திய ஜவுளி துறை, இடர்பாட்டிற்கு உள்ளாகியுள்ள நிலையில், எந்த அளவிற்கு, பருத்தி ஏற்றுமதி செய்யப்பட உள்ளது என்பது தெரியாததால், வரும் பருவத்தில், இந்திய ஜவுளி துறைக்கு, போதிய அளவிற்கு, பருத்தி கிடைக்காமல் போகக் கூடும்.

மேலும், வரும் பருவத்தில், பருத்தி உற்பத்தி குறையும் நிலையில், இதன் விலையும் அதிகரிக்கும். அவ்வாறு, விலை உயர்ந்து, பருத்திக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலையில், மூலப் பொருட்கள் இன்மையால், உள்நாட்டு ஜவுளி துறை மேலும் பாதிப்புக்குள்ளாகும் என, இத்துறையைச் சேர்ந்த ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

**கடந்த ஒன்பது ஆண்டுகளில் இந்தியாவின் வளர்ச்சி**

ஜூன் 06,2012,00:24



சென்னை:சர்வதேச நிலவரங்களால், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி தற்போது குறைந்துள்ளது என்றாலும், கடந்த ஒன்பது ஆண்டுகளில், இந்தியா பல துறைகளில் குறிப்பிடத்தக்க அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளது.உள்நாட்டு உற்பத்தி :இதற்கு எடுத்துக்காட்டாக, கடந்த 2002-03ம் நிதி ஆண்டில், 24 லட்சத்து 54 ஆயிரத்து 561 கோடியாக இருந்த, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜி.டீ.பி) மதிப்பு, சென்ற 2011-12ம் நிதியாண்டில், 3.6 மடங்கு வளர்ச்சி கண்டு, 88 லட்சத்து 55 ஆயிரத்து 797 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. மேலும், கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பாக, நாட்டின் தனிநபர் சராசரி வருவாய், ஆண்டுக்கு 18 ஆயிரத்து 885 ரூபாயாக இருந்தது. இது, தற்போது, 3 மடங்கு உயர்ந்து, 60 ஆயிரத்து 603 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 2002ம் ஆண்டில் நாட்டின் மக்கள் தொகை,106 கோடியாக இருந்தது. இந்த எண்ணிக்கை தற்போது, 14 சதவீதம் அதிகரித்து, 120 கோடியாக உயர்ந்துள்ளது. இதேபோன்று, 1.05 கோடியாக இருந்த மொபைல்போன் வாடிக்கையாளர் எண்ணிக்கை, தற்சமயம், 90 கோடியைத் தாண்டியுள்ளது.நாட்டின் நிதிப்பற்றாக்குறை கடந்த 2002-03ம் நிதியாண்டில், அப்போதைய மொத்த உள்நாட்டு உற்பத்தியில், 5.9 சதவீதமாக இருந்தது. இது, தற்போது 3.5 மடங்கு அதிகரித்து 5.8 சதவீதமாக (தற்போதைய ஜி.டீ.பி.,-88 லட்சத்து 55 ஆயிரத்து 797 கோடி ரூபாய்) உள்ளது.2003 ம் ஆண்டு மார்ச் மாதத்தில், டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் சராசரி மதிப்பு 47.50 ரூபாயாக இருந்தது. ஆனால், தற்போது இதன் சராசரி மதிப்பு 55.54 ஆக வீழ்ச்சி கண்டுள்ளது. அதாவது டாலர் மதிப்பு உயர்ந்து இந்திய ரூபாயின் மதிப்பு குறைந்துள்ளது.

நாட்டின் அன்னிய நேரடி முதலீடு, கடந்த 2002-03ம் நிதி ஆண்டு, 504 கோடி டாலராக இருந்தது. இது, சென்ற 2011-12ம் நிதியாண்டில், 9 மடங்கு வளர்ச்சி கண்டு, 4,690 கோடி டாலராக அதிகரித்துள்ளது. இதே போன்று, அன்னிய நிதி நிறுவனங்களின் முதலீடு, 17.8 சதவீதம் வளர்ச்சி கண்டு, 97.9 கோடி டாலரிலிருந்து, 1,741 கோடி டாலராக உயர்ந்துள்ளது.அதேசமயம், கடந்த

2002-03ம் நிதியாண்டில், என்றளவில், 26 சதவீதம் வளர்ச்சி கண்டிருந்த தகவல் தொழில்நுட்ப துறை, தற்போது, 11-14 சதவீதம் அளவிற்கே வளர்ச்சி கண்டுள்ளது என நாஸ்காம் அமைப்பு மதிப்பீடு செய்துள்ளது.

வேளாண் துறை:இதே போன்று, மொத்த உள்நாட்டு உற்பத்தி, வேளாண்மைத் துறையின் பங்களிப்பும் சரிவைக் கண்டுள்ளது. அதாவது, 2002-03ம் நிதியாண்டில், 21 சதவீதமாக இருந்த இத்துறையின் பங்களிப்பு, 2011-12ம் நிதியாண்டில், 17 சதவீதம் என்றளவில் சரிவடைந்துள்ளது. மும்பை பங்குச் சந்தையின் குறியீட்டு எண் 'சென்செக்ஸ்', 2003ம் ஆண்டு மார்ச் 31ம் தேதியன்று, 3,048.72 புள்ளிகளாக இருந்தது. இது, நான்கரை மடங்கு வளர்ச்சி கண்டு, நடப்பு ஜூன் மாதம் 5ம் தேதியன்று (நேற்று) 16,020.64 புள்ளிகளுக்கு உயர்ந்துள்ளது.

## தொடர்ந்து இரண்டு மாதங்களாக சர்வதேச காபி ஏற்றுமதியில் சரிவு

ஜூன் 06,2012,00:22



புதுடில்லி:நடப்பாண்டு, ஏப்ரல் மாதத்தில், சர்வதேச காபி ஏற்றுமதி, 87.70 லட்சம் மூட்டைகளாக (1 மூட்டை-50 கிலோ) குறைந்துள்ளது. இது, முந்தைய ஆண்டின் இதே மாதத்தில், மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட, 12 சதவீதம் (99.30 லட்சம் மூட்டைகள்) குறைவாகும்.இதையடுத்து, சர்வதேச காபி ஏற்றுமதி, தொடர்ந்து இரண்டு மாதங்களாக குறைந்துள்ளது என, உலக காபி உற்பத்தியாளர் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

சென்ற மார்ச் மாதத்தில், சர்வதேச அளவில், இதன் ஏற்றுமதி, முந்தைய ஆண்டின் இதே மாதத்தை விட, 7 சதவீதம் குறைந்து, 1.19 கோடி மூட்டைகளிலிருந்து, 98.80 லட்சம் மூட்டைகளாக குறைந்து காணப்பட்டது.அதேசமயம், சென்ற பிப்ரவரி மாதத்தில், சர்வதேச காபி ஏற்றுமதி, 7 சதவீதம் உயர்ந்து, 86.70 லட்சம் மூட்டைகளிலிருந்து, 93.20 லட்சம் மூட்டைகளாக உயர்ந்திருந்து என்பது குறிப்பிடத்தக்கது.நடப்பு காபி பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்), அக்டோபர் முதல் ஏப்ரல் வரையிலான, ஏழு மாத காலத்தில், சர்வதேச காபி ஏற்றுமதி, 6 கோடி மூட்டைகளாக குறைந்துள்ளது. இது, முந்தை பருவத்தில், இதே காலத்தில், மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை

விட, 4 சதவீதம் (6.33 கோடி மூட்டைகள்) குறைவாகும்.சென்ற ஏப்ரல் வரையிலான, 12 மாத காலத்தில், இதன் ஏற்றுமதி, 10.34 கோடி மூட்டைகளிலிருந்து, 10.20 கோடி மூட்டைகளாக குறைந்துள்ளது என, இந்த கூட்டமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

## 1,300 பருத்தி மூட்டைகள் ரூ.22 லட்சத்துக்கு ஏலம்

பதிவு செய்த நாள் : ஜூன் 06,2012,01:52 IST

கருத்தை பதிவு செய்ய

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 1,300 பருத்தி மூட்டைகள், 22 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. சேலம் மாவட்டம், ஆத்தூர் புதுப்பேட்டையில், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்துக்கு, ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, சின்னசேலம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து, 700க்கும் மேற்பட்ட விவசாயிகள், 1,300 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். மதியம் 2 மணியளவில், ஈரோடு, கோவை, திருப்பூர், ஆத்தூர், கும்பகோணம் பகுதியை சேர்ந்த பருத்தி வியாபாரிகள் மற்றும் கூட்டுறவு அலுவலர்கள், பருத்தி கொள்முதல் விலை நிர்ணயம் செய்தனர். இதில், பி.டி., ரகம் பருத்தி குவிண்டால் அதிகபட்சமாக, 3,969 ரூபாயும், குறைந்தப்பட்சமாக, 2,897 ரூபாயும், டி.சி.ஹெச்., அதிகபட்சம், 5,019 ரூபாயும், குறைந்தபட்சம், 4,009 ரூபாயும், கொட்டு பருத்தி அதிகபட்சம், 2,669 ரூபாயும், குறைந்தபட்சம், 1,449 ரூபாயும் விற்பனை செய்யப்பட்டது. விவசாயிகளிடம் கொள்முதல் செய்த பருத்தி மூட்டைகள், 22 லட்சம் ரூபாய்க்கு ஏலம் நடந்தது.

## உளுந்து, பாசி பயறு சாகுபடிக்கு மானியமாக ரூ.1 கோடி ஒதுக்கீடு

பதிவு செய்த நாள் : ஜூன் 05,2012,23:35 IST

கருத்தை பதிவு செய்ய

சிவகங்கை: "மாவட்டத்தில் ஆயிரம் எக்டேர் புன்செய் நிலங்களில் உளுந்து, பாசி பயறு சாகுபடியை ஊக்கப்படுத்த அரசு ரூ.1 கோடி ஒதுக்கியுள்ளதாக," விவசாய இணை இயக்குனர் தட்சிணாமூர்த்தி தெரிவித்தார்.

அவர் கூறியதாவது: மாவட்டத்தில் புன்செய் பகுதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஆயிரம் எக்டேர் புன்செய் நிலங்களில் நிலக்கடலைக்கு பின், உளுந்து, பாசிபயறு சாகுபடி செய்ய நடவடிக்கை

எடுக்கப்படுகிறது. இதற்காக முதலில் நடவு செய்யும் நிலக்கடலை சாகுபடிக்கு விதை, உரம், பூச்சி மருந்துகள், ஜிப்சம் இடுபொருட்களுக்கு ஏக்கருக்கு ரூ.2 ஆயிரமும், 2ம் பயிரான உளுந்து, பாசிப்பயறு சாகுபடிக்கு விதை, உரம், பூச்சி மருந்துகள் வாங்க ஏக்கருக்கு ஆயிரம் ரூபாயும் மானியமாக வழங்கப்படும்.

நிலக்கடலை உடைப்பு உள்ளிட்ட கருவிகள் வாங்க ரூ.10 ஆயிரம் மானியம் வழங்கப்படும். இதில் பயன்பெற விரும்பும் விவசாயிகள், விவசாய விரிவாக்க மையத்தில் முன்பதிவு செய்துகொள்ளலாம், என்றார்.

---